**<u>2025 அக்டோபர் மாதம் 09 – ஆம் தேதி வியாழக்கிழமை</u>**

**<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>**

**<u>S.C. நெம்பர் : 124/2024</u>**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 124/2024 | பெயர்: முருகேசன் த/பெ.கருப்பணன் | PW1 | 09.10.2025 |

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

**<u>சாட்சி மனுவின் பெயரில் அழைக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

ஏற்கனவே என்மீது தேனி, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் S.C.31/2025 பிரிவுகள் 307 இ.த.ச. வழக்கில் 08.10.2025 ம் தேதி ஏற்பட்ட வாய்தாவில் குற்றஞ்சாட்டப்பட்ட 1ம் எதிரி தமிழர் (எ) இளந்தமிழர் புகார் வழக்கில் சமரசம் செய்துக்கொண்டீர்கள் என்றால் சரிதான். நான் வசித்து வரும் வீடும், 1வது எதிரி வீடும் அருகில் உள்ளது என்றால் சரிதான். நானும், 1வது எதிரியும் நெருக்கமான குடும்ப உறவினர்கள் என்றால் சரிதான். 16.10.2023ம் தேதி ராஜேஸ்குமார் என்பவர் கடைக்குச் செல்லும்போது அதிகமான கூட்டம் இருந்ததா என்றால் சரிதான். அந்தக்கூட்டத்தில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்தினால் எனக்கு இரத்தம் வந்ததா என்றால் ஆமாம். எனக்கு இரத்தம் வந்த காரணத்தினால் மயக்கம் வந்தது என்றால் சரிதான். அண்ணாமலை பர்னிச்சர் கடையில் அதிகமான கூட்டம் இருந்ததால் கூட்டத்தில் என்னை யார் வெட்டினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். நான் மயக்கமடைந்தவுடன் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் சரிதான். மருத்துவமனையில் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால்

விசாரித்தார்கள். போலீசார் என்னிடம் எழுதப்படாத வெற்றுத்தாளில் என்னிடம் கைரேகை வாங்கினார்கள் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் போலீசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே எங்களுக்குள் இருந்த குடும்ப பிரச்சனையினாலும், சந்தேகத்தின் பேரிலும், 1வது எதிரி பேரிலும், அவருடன் இருந்த 2, 3 எதிரிகள் பெயரிலும் புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 09.10.2025ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.09 18:59:15 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
09.10.2025

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 124/2024**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 124/2024 | பெயர்: ராஜேஸ்குமார் த/பெ.அசோகன் | PW3 | 09.10.2025 |

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

**சாட்சி மனுவின் பெயரில் அழைக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் அண்ணாமலை பர்னிச்சர் கடையின் உரிமையாளர் என்றால் சரிதான். சம்பவ தேதியன்று நான் அண்ணாமலை பர்னிச்சர் கடையில் தான் இருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய அண்ணாமலை பர்னிச்சர் கடையில் எப்போதும் அதிகமான ஆட்கள் வந்து வியாபாரம் வாங்குவார்கள் என்றால் சரிதான். என்னுடைய அண்ணாமலை பர்னிச்சர் கடைக்கு அருகில் பெட்ரோல் பல்க் இருக்கிறது என்றால் சரிதான். பெட்ரோல் பல்க்கில் எப்போதும் அதிகமான கூட்டம் வந்துப்போகும் என்றால் சரிதான். நான் அண்ணாமலை பர்னிச்சர் கடைக்குள் அமர்ந்து வியாபாரம் பார்த்துக் கொண்டிருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய அண்ணாமலை பர்னிச்சர் கடைக்கு வெளியில் என்ன நடந்துக்கொண்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காயம்பட்ட முருகேசன் என்பவருக்கு காயம் ஏற்பட்டு சத்தம் கேட்டப்பிறகு தான் எனக்கு தெரியும். முருகேசனுக்கு ஏற்பட்ட காயம் யாரால் ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. குற்றஞ்சாட்டப்பட்ட 1வது எதிரி எனது உள்ளூர்காரர் என்பதால் அவரை எனக்கு தெரியும். 2, 3 எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் சொல்லிக்கொடுத்து முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தேன் என்றும், சம்பவம் குறித்து எனக்கு

தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 09.10.2025 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.09 18:59:21 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
09.10.2025

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 124/2024**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 124/2024 | பெயர்: ராமவேல்<br>த/பெ.முத்துவேல் | PW4 | 09.10.2025 |

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

**சாட்சி மனுவின் பெயரில் அழைக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் அண்ணாமலை பர்னிச்சர் கடையில் தான் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். நான் அண்ணாமலை பர்னிச்சர் கடையில் இரண்டு ஆண்டுகளாக வேலை பார்த்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் வடுகபட்டி, பெரியகுளம் தாலுகா, தேனி மாவட்டம் ஆகும். எனக்கு சொந்த ஊரிலிருந்து போடிநாயக்கனூருக்கு இடையே உள்ள தொலைவு எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 30 கி.மீ. தூரம் இருக்கும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவ தேதியன்று நான் கடையில் வேலைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, கடையில் கூட்டம் அதிகமாக இருந்தது என்றாலக் சரிதான். கடைக்கு வெளியில் கூட்டம் அதிகமாக இருந்தது என்றால் சரிதான். எனது கடைக்கு அருகில் பெட்ரோல் பல்க் உள்ளது என்றால் சரிதான். சம்பவ தேதியன்று நான் கடையின் உள்ளே தான் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். கடைக்கு வெளியே என்ன நடந்தது என்பதை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 முருகேசன் என்பவருக்கு காயம்பட்டு எனது கடையின் உரிமையாளர் சென்று பார்த்தப்போது தான் நானும் வந்து பார்த்தேன் என்றால் சரிதான். நான் சென்று பார்த்தப்போது அ.சா.1 முருகேசன் மயக்க நிலையில் இருந்தார் என்றால்

சரிதான். காயம்பட்ட முருகேசனை அதன்பிறகு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டனர். பின்னர் வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 09.10.2025 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.09 18:59:27 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
09.10.2025